## May 20, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பெட்ரோல், டீசல் சில்லறை விற்பனை விலையை எண்ணெய் நிறுவனங்கள் செவ்வாய்க்கிழமை (மே 19) லிட்டருக்கு தலா 90 காசு வீதம் உயர்த்தின.

(i) கடந்த 4 நாள்களில் இரண்டாவது முறையாக இரு முக்கிய எரிபொருளின் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இது வாகன ஓட்டிகள், பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

(iii) இந்த விலை உயர்வால், சென்னையில் 103.90-க்கு விற்கப்பட்ட ஒரு லிட்டர் பெட்ரோல் தற்போது 104.80-ஆக உயர்ந்துள்ளது. டீசல் விலை லிட்டருக்கு ரூ.95.25-இல் இருந்து ரூ. 96.15-ஆக உயர்ந்துள்ளது.

(iii) சிக்கன நடவடிக்கை:

- மேற் காசிய போர் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடியின் பின்னணியில், எரிபொருள் சிக்கன நடவடிக்கையை பிரதமர் நரேந்திர மோடி கடந்த வாரம் மேற்கொண்டார்.
- அதன் ஒரு பகுதியாக தனது பாதுகாப்பு அணிவகுப்பு வாகன எண்ணிக்கையை கணிசமாகக் குறைத்ததோடு, பொதுமக்களும் பெட்ரோல், டீசல், எரிவாயு போன்றவற்றை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்தார்.
- பிரதமரைத் தொடர்ந்து, பல்வேறு மாநில முதல்வர்களும், மத்திய அமைச்சர்களும் எரிபொருள் சிக்கன நடவடிக்கையை மேற்கொண்டனர்.
- எனினும், பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு விலை உயர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- பெட்ரோலில் 20 சதவீத எத்தனால் கலப்பு (இ20) கடந்த ஏப்ரல் 1-ஆம் தேதி முதல் நாடு முழுவதும் அமல்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.
- இதன் மூலம் கச்சா எண்ணெய் இறக்குமதியை சற்று குறைக்க முடியும் என்று அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. சென்னை உயர்நீதிமன்றத்துக்கு 19 நீதிபதிகளை நியமிப்பதற்கான முன்மொழிவுகளுக்கு உச்சநீ திமன்றகொலீஜியம் (நீதிபதிகள் தேர்வுக் குழு) ஒப்புதல் அளித்தது. இது தொடர்பாக உச்சநீதிமன்ற கொலீஜியத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தொடர்பான அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

- உச்சநீதிமன்ற கொலீஜியம் மே 18-ஆம் தேதி கூடியது. அதில் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகளாக 19 பேரை நியமிக்கும் முன்மொழிவுகளுக்கு கொலீஜியம் ஒப்புதல் அளித்துள்ளது. கடந்த ஆண்டில் நான்கு கட்டங்களாகச் செய்யப்பட்ட இந்த முன்மொழிவுகளில், 9 பேர் நீதித்துறையைச் சேர்ந்தவர்கள்; 10 பேர் வழக்குரைஞர்கள் ஆவர்.

(i) உச்சநீதிமன்ற கொலீஜியம் என்பது இந்திய உச்சநீதிமன்ற நீதிபதிகள் மற்றும் உயர்நீதிமன்றங்களில் தலைமை நீதிபதிகள் மற்றும் நீதிபதிகளாக நியமிக்க தகுதி பெறுவோரைத் தேர்வு செய்யவும், இடமாற்றம் செய்யவும் பதவி உயர்வு வழங்கவும் முடிவெடுக்கக் கூடிய அதிகாரம் பெற்ற அமைப்பாகும்.

(ii) உச்சநீதிமன்ற தற்போதைய கொலீஜியம், இந்திய தலைமை நீதிபதி மற்றும் உச்சநீதிமன்றத்தின் நான்கு மூத்த நீதிபதிகள் என ஐந்து நீதிபதிகளைக் கொண்டுள்ளது.

3. காங்கோ குடியரசின் கிழக்கு பகுதிகளில் வேகமாக பரவி வரும் எபோலா தொற்றுப் பாதிப்பால் இதுவரை 131 பேர் உயிரிழந்துள்ளனர்.

(i) அதேபோல், பாதிக்கப்பட்ட பகுதிகளில் 513 பேருக்கு நோய்த் தொற்றுக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

(ii) எபோலா வைரஸின் அரியவகையான 'புண்டிபுக்யோ' வைரஸால் ஏற்படுவதாக அறியப்படும் இத்தொற்றுப் பரவலை சர்வதேச அவசரநிலையாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.

(iii) காங்கோ, உகாண்டாவில் இது வரை 20-க்கும் மேற்பட்ட முறை எபோலா தொற்று ஏற்பட்டுள்ள போதிலும், இந்த புண்டிபுக்யோ வகை வைரஸ் கண்டறியப்படுவது வரலாற்றில் இது 3-ஆவது முறையாகும். இதற்கு இதுவரை அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளோ அல்லது மருந்துகளோ கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

4. நியூஸிலாந்தில் அரசின் செலவினங்களைக் கணிசமாகக் குறைக்கும் நோக்கில், 2029-க்குள் சுமார் 9,000 அரசுத் துறைப் பணியிடங்களை (மொத்த ஊழியர்களில் 14 சதவீதம்) குறைக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக அந்நாட்டின் நிதி அமைச்சர் நிகோலா வில்லிஸ் செவ்வாய்க்கிழமை அறிவித்தார்.

(i) இந்நடவடிக்கையின் மூலம், சுமார் 140 கோடி டாலர் நிதியைச் சேமிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ii) ஊழியர்களின் பணிநீக்கத்தையடுத்து, அரசு எண்ணிக்கை 55,000-ஆக குறையும். எனினும், ராணுவம், ஆசிரியர்கள், மருத்துவர்கள் ஆகியோருக்கு இந்நட வடிக்கைகளில் இருந்து விலக்கு அளிக்கப்படும். 'இத்தகைய பணிநீக்கங்கள், பொதுமக்களுக்கான சேவைகளை வெகுவாகப் பாதிக்கும்' என்று அரசின் முடிவுக்கு எதிர்க்கட்சிகளும், தொழிலாளர் சங்கங்களும் கண்டனம் தெரிவித்துள்ளன.

5. ரஷிய அதிபர் விளாதிமீர் புதின், சீனாவுக்கு 2 நாள்கள் அரசுமுறைப் பயணமாக அந்நாட்டு தலைநகர் பெய்ஜிங்குக்கு வந்தடைந்தார்.

(i) அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் சீனாவுக்குப் பயணம் மேற்கொண்ட ஒருவார கால இடைவெளியிலேயே, புதினின் இந்த வருகை நிகழ்ந்துள்ளது. ஒரே மாதத்தில் அமெரிக்க, ரஷிய அதிபர்களை சீனா விருந்தினர்களாக ஏற்றுள்ளது சர்வதேச அரசியல் அரங்கில் கவனத்தை ஈர்த்துள்ளது.

(ii) இரு நாடுகளுக்கும் இடையே கடந்த 2001-இல் கையொப்பமான நல்லெண்ணம் மற்றும் நட்புறவு ஒப்பந்தத்தின் 25 ஆண்டுகள் நிறை வையொட்டி அமைந்த இப்பயணத்தின் முக்கிய நிகழ்வாக, ரஷிய அதிபர் புதின், சீன அதிபர் ஷி ஜின் பிங் இடையிலான நேரடி பேச்சு வார்த்தை புதன்கிழமை (மே 20) நடைபெறவுள்ளது.

6. தென்கொரியா-ஜப்பான் நாடுகளுக்கு இடையே எரிபொருள் விநியோகம், பிராந்திய பாதுகாப்புக்கான ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான ஒப்பந்தம் எட்டப்பட்டது.

(i) தென்கொரியாவின் ஆண்டோங் நகரில் அந்நாட்டு அதிபர் லீ ஜே மியுங் மற்றும் ஜப்பான் பிரதமர் சனே தகாய்ச்சி நடத்திய பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்த அறிவிப்பு கூட்டாக வெளியிடப்பட்டது.

(ii) மத்திய கிழக்கு போர்ச் சூழலால் பொருளாதார ரீதியாக எழுந்துள்ள சவால்களை எதிர்கொள்ளவும், ஆசிய நாடுகளுடனான ஒருங்கிணைப்பை விரிவுபடுத்தவும் இரு நாடுகளும் இணைந்து செயல்படத் தீர்மானித்துள்ளன.

(iii) குறிப்பாக, மத்திய கிழக்கு போரினால் எரிபொருள் விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளைச் சமாளிக்க, கச்சா எண்ணெய் மற்றும் எல்பிஜி இருப்பை மேம்படுத்துதல்; நெருக்கடியான காலங்களில் எரிபொருள்களைப் பரிமாறிக் கொள்வது உள்ளிட்ட கூட்டு முயற்சிகளை முன்னெடுக்க இருதரப்பும் ஒப்புக்கொண்டன

(iv) அதேபோல், வட கொரியாவின் அச்சுறுத்தல் மற்றும் பிராந்திய பதற்றங்களைச் சமாளிக்க, அமெரிக்காவுடனான முத்தரப்புப் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இரு தலைவர்களும் உறுதியேற்றனர்.

(v) அதிபர் லீ ஜே மியுங்கின் சொந்த ஊரும், யுனெஸ்கோ பாரம்பரியப் பெருமை வாய்ந்ததுமான ஆண்டோங்கில் நடைபெற்ற இந்தச் சந்திப்பு தலைவர்கள் ஒருவருக்கொருவர் சொந்த ஊர்களுக்குப் பயணம் செய்யும் தனித்துவமான இருதரப்பு அணுகுமுறையின் ஒரு பகுதியாகும். முன்னதாக, கடந்த ஜனவரியில் ஜப்பான் பிரதமர் சனே தகாய்ச்சியின் சொந்த ஊரான நாராவில் அதிபர் லீ ஜே மியுங் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

7. இந்தியன் ஓபன் சர்ஃபிங் போட்டி, வரும் 29 முதல் 31-ஆம் தேதி வரை மங்களூரில் உள்ள தனிர்பவி கடற்கரையில் நடைபெறவுள்ளது. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் முதல் முறையாக சர்ஃபிங்குக்கு இந்தியா தகுதிபெற்றுள்ள நிலையில், அதற்கான தயார்நிலை போட்டி இது.

8. இந்தியா-நார்டிக் நாடுகள் இடையிலான மூன்றாவது உச்சி மாநாடு, நார்வேயின் ஓஸ்லோ நகரில் நடைபெற்றது.

(i) இந்த மாநாட்டுக்குப் பின் செய்தியாளர்கள் சந்திப்பில் பிரதமர் மோடி கூறியதாவது: தற்போதைய உலகளாவிய பதற்றங்கள் மற்றும் போர்களுக்கு மத்தியில், விதிகள் அடிப்படையிலான உலக ஒழுங்குமுறையை வலுப்படுத்த இந்தியாவும், நார்டிக் நாடுகளும் ஒன்றிணைந்து பணியாற்றும் என்றார்.

(ii) நார்டிக் நாடுகள் என்பது வட ஐரோப்பா மற்றும் வடக்கு அட்லாண்டிக் பிராந்தியத்தில் அமைந்துள்ள தனித்துவமான

புவியியல் அமைப்பு மற்றும் கலாசாரத்தை உள்ளடக்கிய பிராந்தியமாகும். டென்மார்க், பின்லாந்து, ஐஸ்லாந்து, நார்வே, ஸ்வீடன் ஆகிய 5 நார்டிக் நாடுகளும், ஒட்டுமொத்தமாக 1.9 ட்ரில்லியன் டாலருக்கும் மேல் (ரூ.183 லட்சம் கோடி) உற்பத்தி மதிப்பை (ஜிடிபி) கொண்டுள்ளன. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் நிலைத்தன்மை மிக்க கடல்சார் நிர்வாகத்தில் உலக அளவில் முன்னணியில் உள்ள இந்த நாடுகளுடன் தொழில்நுட்பம், புத்தாக்கம், பசுமைசார் மாற்றம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நிலையான வளர்ச்சி, நீலப் பொருளாதாரம், பாதுகாப்பு, விண்வெளி, மக்கள் ரீதியிலான தொடர்பு உள்ளிட்ட துறைகளில் உத்திசார் ஒத்துழைப்பை வலுப்படுத்த இந்தியா வியூக ரீதியில் செயலாற்றுகிறது.

(iii) இந்தியா-நார்டிக் நாடுகள் இடையே முதலாவது உச்சி மாநாடு கடந்த 2018-இல் ஸ்டாக்ஹோமிலும் (ஸ்வீடன்), இரண் டாவத உச்சி மாநாடு கடந்த 2022- இல் கோபன்ஹேகனிலும் (டென்மார்க்) நடைபெற்றது.

(iv) பின்லாந்து, டென்மார்க், ஐஸ்லாந்து பிரதமர்களுடன் மோடி ஆலோசனை:

- நார்வே தலைநகர் ஓஸ்லோவில் பின்லாந்து, டென்மார்க், ஐஸ்லாந்து நாடுகளின் பிரதமர்களைத் தனித்தனியாக சந்தித்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, வர்த்தகம், பசுமை எரி சக்தி, எண்மமயமாக்கல், மீன்வளம் உள்ளிட்ட துறைகளில் பரஸ்பர உறவுகளை வலுப்படுத்துவது குறித்து ஆலோசித்தார். முக்கியத்துவம் வாய்ந்த பிராந்திய, சர்வதேச விவகாரங்கள் குறித்தும் அவர்களுடன் விவாதித்தார்.
- ஐந்து நாடுகளுக்கான அரசு முறைப் பயணத்தின்கீழ், ஐக்கிய அரபு அமீரகம், நெதர்லாந்து, ஸ்வீடனைத் தொடர்ந்து நான்காவதாக பிரதமர் மோடி நார்வே நாட்டுக்கு வந்தார். நார்வேக்கு இருதரப்பு அரசுமுறைப் பயணமாக இந்தியப் பிரதமர் பயணம் மேற்கொண்டது, கடந்த 43 ஆண்டுகளில் இதுவே முதல்முறையாகும்.
- ஓஸ்லோவில் இந்தியா-நார்டிக் நாடுகள் இடையிலான மூன்றாவது உச்சி மாநாட்டில் பங்கேற்கும் முன்பாக பின்லாந்து பிரதமர் பெட்டெரி ஓர்போ, டென்மார்க் பிரதமர் மெட்டே ஃபிரடெரிக்சன், ஐஸ்லாந்து பிரதமர் கிறிஸ்ட்ரன் ஃபிரோஸ்டோடிர் ஆகியோரை பிரதமர் மோடி தனித்தனியாக சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

(v) பின்லாந்து:

- இந்தியா மற்றும் ஐரோப்பிய தடையற்ற வர்த்தக கூட்டமைப்பு (இஎஃப்டிஏ) இடையே கடந்த 2024, மார்ச்சில் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்ட பிறகு இந்தியா-பின்லாந்து வர்த்தக உறவு உத்வேகம் பெற்றுள்ளது.
- நோகியா, கோனே எலிவேட்டர், வார்ட்சிலா, ஃபோர்டம் உள்பட 600-க்கும் மேற்பட்ட பின்லாந்து நிறுவனங்கள் இந்தியாவில் செயல்படுகின்றன.
- வர்த்தகம்-முதலீடு, எண்மமயமாக்கல், செயற்கை நுண்ணறிவு, 5ஜி-6ஜி, குவாண்டம் தொழில்நுட்பம், நிலையான வளர்ச்சி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து அந்நாட்டு பெட்டெரி ஓர்போவுடன் பிரதமர் மோடி ஆலோசித்தார். பின்லாந்தில் இந்தியர்கள், இந்திய வம்சாவளியினர் என 33,445 பேர் உள்ளனர் என் பது குறிப்பிடத்தக்கது.

(vi) டென்மார்க், ஐஸ்லாந்து:

- இந்தியாவில் கப்பல் கட்டுமானம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, சுற்றுச்சூழல், வேளாண்மை, உணவு பதப்படுத்துதல், நவீன நகர்ப்புற மேம்பாடு உள்ளிட்ட துறைகளில் 200-க்கும் மேற்பட்ட டென்மார்க் நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளன. டென்மார்க்கில் உள்ள இந்திய சமூகத்தினரின் எண்ணிக்கை 22,000 ஆகும்.
- இதேபோல், இந்தியாவும், ஐஸ்லாந்தும் வலுவான வர்த்தக-கலாசார உறவைக் கொண்டுள்ளன. யோகா, பாரம்பரிய இசை, நடனம், திரைத்துறை, உணவுகள் என இந்திய கலாசாரத்தின் மீது ஐஸ்லாந்து பெரிதும் ஆர்வம் காட்டி வருகிறது. ஐஸ்லாந்து பிரதமர் உடனான சந்திப்பில், நீலப் பொருளதாரம் சார்ந்த அந்நாட்டின் வல்லமையை பிரதமர் மோடி வெகுவாக பாராட்டினார்.

(vii) அறிவியல்-தொழில்நுட்ப ஒப்பந்தங்கள்:

பிரதமர் மோடி-நார்வே பிரதமர் ஜோனஸ் கர்ஸ்டோர் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைக்குப் பிறகு அறிவியல், தொழில்நுட்பம், புத்தாக்கம், நிலையான வளர்ச்சி சார்ந்த இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

9. ரஷியாவிட மிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதற்கு நாடுகளை அனுமதிக்கும் வகையில் பொருளாதார தடைகளிலிருந்து அளிக்கப்பட்ட விலக்கை மேலும் ஒரு மாதத்துக்கு அமெரிக்கா நீட்டித்துள்ளது.

(i) இதுகுறித்து அமெரிக்க நிதியமைச்சக வெளிநாட்டு சொத்துகள் கட்டுப்பாட்டு அலுவலகம் வெளியிட்ட உத்தரவில், 'உலக நாடுகள் ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கிக் கொள்ள கடந்த ஏப்ரல் 17-ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட பொது உரிம எண்.134பி- இன் கீழான தடை விலக்கு மே 16- ஆம் தேதியுடன் காலாவதியான நிலையில், அது மே 18-ஆம் தேதி முதல் மீண்டும் நடைமுறைக்கு வரும் வகையில் 'பொது உரிம எண்.134சி-ஆக மாற்றி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

(ii) அதன்படி ஏப்ரல் 17-ஆம் தேதியன்று அல்லது அதற்கு முன்பாக கப்பலில் ஏற்றப்பட்டு பயணத்துக்காக கடலில் காத்திருக்கும் ரஷிய கச்சா எண்ணெய்யை உலக நாடுகள் வரும் ஜூன் 17-ஆம் தேதி வரை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறது' என்று தெரிவிக்கப்பட்டது.

(iii) அதன்படி, ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய்யை வாங்கிக் கொள்ள உலக நாடுகளுக்கு மூன்றாவது முறையாக அமெரிக்கா பொருளாதார தடை விலக்கை அளித்துள்ளது.

(iv) முன்னதாக, கடந்த மார்ச் மாதம் இந்த தடை விலக்கை முதன் முறையாக அமெரிக்கா அளித்தது. இது கடந்த ஏப்ரல் 11-ஆம் தேதியுடன் காலாவதியான நிலையில், கடந்த மே 16-ஆம் தேதி வரை மேலும் ஒரு மாதத்துக்கு நீட்டுப்பு செய்தது.

(v) உக்ரைன் மீது ரஷியா தொடர் தாக்குதலை நடத்திவரும் நிலையில், ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்கும் நாடுகள் மற்றும் நிறுவனங்கள் மீது பொருளாதார தடை நடவடிக்கைகளை அமெரிக்கா மேற்கொண்டது.

(vi) இந்தியாவிலுள்ள நிறுவனங்கள் உள்பட பல நாடுகளில் உள்ள நிறுவனங்கள் மீது பொருளாதார தடையை அமெரிக்கா விதித்தது. மேலும், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யும் பொருள்கள் மீது 25 சதவீத கூடுதல் வரியை அமெரிக்கா விதித்தது.

(vii) இதுபோல மேலும் பல நாடுகள் மீது வரிவிதிப்பு நடவடிக்கையை அமெரிக்கா மேற்கொண்டது. ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை குறைத்ததைத் தொடர்ந்து, இந்தியா மீதான 25 சதவீத கூடுதல் வரி விதிப்பை அமெரிக்கா ரத்து செய்தது.

(viii) இந்தச் சூழலில், ஈரான் மீதான போரால் நாடுகள் சந்தித்துவரும் தாக்கங்களை சற்று தணிக்கும் வகையில், ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய்யை வாங்குவதற்கு உலக நாடுகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைக்கு அமெரிக்கா தொடர்ந்து விலக்கு அளித்து வருகிறது.

10. அணுசக்தி விபத்தால் ஏதேனும் துரதிருஷ்டவசமான சம்பவம் ஏற்பட்டால், அதற்கு இழப்பீடு நிர்ணயிக்க நீதிமன்றங்களுக்கு உள்ள அதிகாரம் தொடர்பான அச்ச உணர்வைப் போக்க முயற்சிக்கப்படும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது. அதேவேளையில், இது சட்டம் இயற்றும் கொள்கை சார்ந்த மிக முக்கிய விவகாரம் என்றும் உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

(i) அணுமின் உற்பத்தியில் தனியார் நிறுவனங்களை அனுமதிக்கும் மசோதா கடந்த ஆண்டு டிசம்பரில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, அந்த மசோதா சட்டமானது. இதற்கு இந்தியாவை உருமாற்றுவதற்கான அணுசக்தியின்

(ii) நிலையான பயன்பாடு மற்றும் மேம்பாட்டு (சாந்தி) சட்டம் 2025 என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின் மூலம், அரசின் வசம் மட்டுமே இருந்த அணுமின் உற்பத்தியில் தனியார் நிறுவனங்களும் ஈடுபட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(iii) ரூ.3,000 கோடி மட்டுமே இழப்பீடு:

இந்தச் சட்டத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் பலர் தாக்கல் செய்துள்ள மனுவில் தெரிவித்துள்ளதாவது:

- இந்தியாவில் அணுமின் நிலையங்களை இயக்குவதற்கு தனியார் துறை மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களை சாந்தி சட்டம் அனுமதிக்கிறது. அணு உலை வெடித்து ஏற்படும் அணுக்கதிர் வீச்சால் மரணங்கள், உடல் நல பாதிப்புகள் ஏற்படுதல் என அணுமின் உற்பத்தியின் போது ஏதேனும் விபத்து ஏற்பட்டால், அதற்கு அந்த நிறுவனங்கள் அதிகபட்சமாக வெறும் ரூ.3,000 கோடி (சுமார் 331 மில்லியன் டாலர்) மட்டுமே இழப்பீடு அளிக்க சாந்தி சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் அணுமின் உற்பத்தியின் போது ஏற்படும் விபத்துக்கு அணுமின் உற்பத்திக்காக கருவிகளை விநியோகித்த நிறுவனத்திடம் இருந்து இழப்பீடு பெறும் அம்சம் சாந்தி சட்டத்தில் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

- இந்த மனு உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சூர்ய காந்த், நீதிபதிகள் ஜயமால்ய பாக்சி, விபுல் எம்.பஞ்சோலி ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பாக விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் கூறியதாவது — அணுமின் உற்பத்தி நிலையங்களால் ஏதேனும் விபத்து ஏற்பட்டாலோ, யாராவது காயமடைந்தாலோ அல்லது வேறு ஏதேனும் துரதிருஷ்டவசமான சம்பவம் நடைபெற்றாலோ, அதற்கு இழப்பீடு வழங்கும் வலுவான வழிமுறை உள்ளதா என்பதே எங்களின் கவலை என்று தெரிவித்தனர்.

(iv) உச்சநீதிமன்றத்தின் அதிகாரத்தை குறைக்காது:

- வழக்குரைஞர் பிரசாந்த் பூஷண் வாதிடுகையில், 'கொள்கை என்ற பெயரில் தான் விரும்பும் எதையும் அரசு செய்யலாம். அதற்காக குடிமக்களின் உரிமைகளை அரசு தியாகம் செய்யக்கூடாது' என்றார்.
- இதைக் கேட்ட நீதிபதிகள், 'இது சட்டம் இயற்றும்கொள்கை சார்ந்த மிக முக்கிய விவகாரமாகும். அதே வேளையில், எவ்வளவு இழப்பீட்டுத் தொகை அளிக்க வேண்டும் என்று வரம்பு விதிக்காவிட்டால், இந்தியாவுக்கு தொழில் செய்ய யார் வருவார்? அணுமின் உற்பத்தி நிலையங்களால் ஏதேனும் துரதிருஷ்டவசமான சம்பவம் நிகழ்ந்தால், அதற்கு அரசும் இழப்பீடும் வழங்கும். எனினும் சட்டத்தின் மூலம், இழப்பீடு அளிக்க வரம்பு விதிக்கப்பட்டுள்ள போதிலும், அது பாதிக்கப்படுவோருக்கு அளிக்க வேண்டிய இழப்பீட்டுத் தொகையை நிர்ணயிக்கும் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தை குறைக்காது' என்று தெரிவித்தனர்.

(v) ஜப்பான், ஜெர்மனியில் அணு மின் நிலையங்கள் மூலம் உற்பத்தி இல்லை:

- பிரசாந்த் பூஷண் வாதிடுகையில், சூரிய மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கு ஏற்படும் செலவைவிட, அணுமின் உற்பத்தி நிலையங்கள் அமைப்பதற்கு அதிக செலவாகும்' என்று தெரிவித்தார். இதைக் கேட்ட நீதிபதிகள், 'உலகில் அணுமின் நிலையங்கள் மூலம் மின்சார உற்பத்தி செய்யாத ஒரு வளர்ந்த அல்லது வளர்ந்து வரும் நாட்டை கூறமுடியுமா' என்று கேள்வி எழுப்பினர்.
- இதற்குப் பதிலளித்த பிரசாந்த் பூஷண், 'ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகள் அணுமின் நிலையங்கள் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதை நிறுத்தியுள்ளன. அமெரிக்காவில் அணுமின் நிலையங்கள் மூலம் விபத்து ஏற்பட்டால், அதற்கு நிறுவனங்கள் ரூ.1.54 லட்சம் கோடி வரை இழப்பீடு அளிக்க வேண்டும். இது தற்போது இந்தியாவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இழப்பீட்டைவிட 100 மடங்கு அதிகம். இதனால் இந்தியாவில் அணுமின் உற்பத்தியில் வெளிநாட்டு நிறுவனங்கள் சமரசம் செய்துகொள்ள சாந்தி சட்டம் வழி வகுக்கிறது' என்று தெரிவித்தார்.
- இதைத் தொடர்ந்து நீதிபதிகள் கூறுகையில், 'அணுசக்தி விபத்தால் ஏதேனும் துரதிருஷ்டவசமான சம்பவம் ஏற்பட்டால், அதற்கு இழப்பீடு நிர்ணயிக்க நீதிமன்றங்களுக்கு உள்ள அதிகாரம் தொடர்பான அச்ச உணர்வைப் போக்க உச்சநீ திமன்றம் முயற்சிக்கும். இந்த விவகாரத்தை உச்சநீதிமன்றம் விரிவாக விசாரிக்கும்' என்றுகூறி, மனு மீதான அடுத்த விசாரணையை ஜூலைக்கு ஒத்திவைத்தனர்.

11.இந்தியாவுக்கு 428.2 மில்லியன் டாலர் (சுமார் ரூ.4,145 கோடி) மதிப்பில் அப்பாச்சி ஹெலிகாப்டர்கள், எம்777ஏ2 அல்ட்ரா லைட் ஹோவிட்சர் பீரங்கிகள் ஆகியவற்றின் நீடித்த செயல்பாடுகளுக்கு உதவும் தொழில்நுட்பங்கள், அது சார்ந்த உபகரணங்களை விற்பனை செய்யும் திட்டத்துக்கு அமெரிக்க வெளியுறவுத் துறை ஒப்புதல் அளித்துள்ளது. இதுதொடர்பாக அமெரிக்க வெளியுறவுத் துறை வெளியிட்ட அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(i) ஏஹெச்-64இ அப்பாச்சி தாக்குதல் ஹெலிகாப்டர்கள் நீடித்து செயல்படுவதற்கான தொழில் நுட்பங்கள், அதுசார்ந்த உபகரணங்கள், தொழில்நுட்ப தரவுகள் உள்ளிட்டவற்றை அமெரிக்காவிடம் இருந்து வாங்க இந்திய அரசு கோரிக்கை விடுத்தது. இதையடுத்து அவற்றை இந்தியாவுக்கு 198.2 மில்லியன் டாலருக்கு (சுமார் ரூ.1,918 கோடி) விற்பனை செய்யும் திட்டத்துக்கு அமெரிக்க வெளியுறவுத் துறை ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டத்தின் முதன்மை ஒப்பந்ததாரராக அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்தில் உள்ள லாக்ஹீட் மார்டின் நிறுவனம், வர்ஜீனியா மாகாணத்தில் உள்ள போயிங் நிறுவனம் ஆகியவை இருக்கும்.

(ii) இதேபோல எம்777ஏ2 அல்ட்ரா-லைட் ஹோவிட்சர் பீரங்கிகள் நீடித்து செயல்பட உதவும் உபகரணங்கள், உதிரி பாகங்கள், தொழில்நுட்ப உதவிகள் உள்ளிட்டவற்றை அமெரிக்காவிடம் இருந்து வாங்க இந்தியா கோரிக்கை விடுத்தது. இதையடுத்து அவற்றை 230 மில்லியன் டாலருக்கு (சுமார் ரூ.2,226 கோடி) விற்பனை செய்யும் திட்டத்துக்கு அமெரிக்க வெளியுறவுத் துறை ஒப்புதல் அளித்துள்ளது.

(iii) இந்தத் திட்டத்துக்கான முதன்மை ஒப்பந்ததாரராக பிரிட்டனின் கம்ப்ரியா பகுதியில் உள்ள பிஏஇ சிஸ்டம்ஸ் நிறுவனம் இருக்கும்.

(iv) இந்த விற்பனை இந்தியாவின் உள்நாட்டு பாதுகாப்பை வலுப்படுத்தி, தற்கால மற்றும் எதிர்கால அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

12. வெறி நாய்கள், குணப்படுத்தமுடியாத அளவுக்கு நோய் பாதிப்புக்கு உள்ளான நாய்கள், ஆபத்தான தெரு நாய்களை கருணைக் கொலை செய்ய முதன் முறையாக அனுமதி அளித்து உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. அவ்வாறு கருணைக் கொலை செய்யும்போது சட்டரீதியிலான வழிமுறைகளை கட்டாயம் பின்பற்றுவது அவசியம் என்றும் உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியது.

(i) தெரு நாய்களின் எண்ணிக்கை அபாயகரமான அளவை எட்டியுள்ள பகுதிகளிலும், அடிக்கடி ஏற்படும் நாய்கடி சம்பவங்கள் அல்லது ஆக்ரோஷமான தாக்குதல்கள் பொது பாதுகாப்புக்கு தொடர் அச்சுறுத்தலாக விளங்கும் இடங்களில் வெறி நாய்கள், குணப்படுத்த முடியாத அளவுக்கு நோய் பாதிப்புக்கு உள்ளான நாய்கள் அல்லது ஆபத்தான தெரு நாய்களை கருணைக் கொலை நடவடிக்கையை உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ளலாம்.

(ii) அத்தகைய கருணைக் கொலையை, சட்டரீதியிலான வழிமுறைகளைப் பின்பற்றியும் கால்நடை மருத்துவ நிபுணர்களின் மதிப்பீட்டுக்கும் பின்னரே மேற்கொள்ள வேண்டும். அத்துடன், விலங்குகளுக்கு எதிரான கொடுமைகளைத் தடுத்தல் சட்டம் 1960, விலங்குகள் பிறப்பு கட்டுப்பாட்டு விதிகள் 2023 மற்றும் அதுதொடர்பான பிற சட்ட விதிமுறைகளுக்கு இணங்கியே இந்த கருணைக் கொலையை செயல்படுத்த வேண்டும் என்று தீர்ப்பளித்தனர்.

13. சோழப் பேரரசின் பெருமையை மீட்டெடுத்தல் :-

(i) ஆனைமங்கலம் செப்பேடுகளை மீட்டெடுத்தல்:

- நெதர்லாந்து நாட்டிற்கு மேற்கொண்ட பயணத்தின்போது, பிரதமர் நரேந்திர மோடி, வரலாற்றுச் சிறப்புமிக்க ஆனைமங்கலம் செப்பேடுகளை அந்நாட்டு அரசிடமிருந்து பெற்றுக்கொண்டார். சோழப் பேரரசிற்குச் சொந்தமான இந்தச் செப்பேடுகள், கடந்த 300 ஆண்டுகளாக லைடன் பல்கலைக்கழகத்தில் (Leiden University) வைக்கப்பட்டிருந்தன; மத்திய அரசின் தொடர் முயற்சிகள் மற்றும் 2023-ஆம் ஆண்டில் யுனெஸ்கோ (UNESCO) அளித்த அழுத்தம் ஆகியவற்றின் விளைவாக இவை தற்போது மீட்டெடுக்கப்பட்டுத் திருப்பியளிக்கப்பட்டுள்ளன.

(ii) தமிழ்நாட்டில் டச்சுக்காரர்களின் இருப்பு:

- டச்சு கிழக்கிந்திய நிறுவனம் (Dutch East India Company) முதன்முதலில் நாகப்பட்டினத்தில் தனது இருப்பை நிலைநாட்டியது. அக்காலகட்டத்தின் வரலாற்றுச் சின்னமாக, தரங்கம்பாடி (Tranquebar) கடற்கரையில் அவர்களால் கட்டப்பட்ட கோட்டை இன்றும் திகழ்கிறது.
- ஆவணங்களைக் கைப்பற்றுதல்: 17-ஆம் நூற்றாண்டில், நாகப்பட்டினத்தில் டச்சுக்காரர்களின் ஆதிக்கம் மேலோங்கி இருந்த சமயத்தில், அவர்கள் 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பல அரசு ஆவணங்களைக் கைப்பற்றி, அவற்றை நெதர்லாந்து நாட்டிற்கு எடுத்துச் சென்றனர்.

(iii) இராஜேந்திர சோழனின் சமயப் பொறை:

- தற்போது மீட்டெடுக்கப்பட்ட செப்பேடுகளில் ஒன்று, ஆனைமங்கலத்தைச் சுற்றியுள்ள 26 கிராமங்களை இராஜேந்திர சோழன் நாகப்பட்டினத்தில் அமைந்திருந்த புத்த விகாரைக்குத் தானமாக வழங்கிய செய்தியைப் பதிவு செய்துள்ளது. இராஜேந்திர சோழன் ஒரு தீவிர சைவ சமயத்தைச் சார்ந்தவராக இருந்தபோதிலும், அவர் ஒரு புத்த விகாரைக்கு அளித்த இத்தானம், சோழ மன்னர்கள் அனைத்துச் சமயங்களையும் போற்றிப் பாதுகாத்து அரவணைத்தனர் என்பதற்கு ஒரு வரலாற்றுச் சான்றாக விளங்குகிறது.

(iv) கலைப்பொருட்களின் உலகளாவிய இடப்பெயர்வு:

- இந்தியக் கோவில்கள் மற்றும் அரண்மனைகளிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட சிலைகள், ஓவியங்கள் மற்றும் அரசு ஆவணங்கள் உள்ளிட்ட 50,000-க்கும் மேற்பட்ட கலாச்சாரப் பொருட்கள், தற்போது மேற்கத்திய நாடுகளின் அருங்காட்சியகங்களிலும் தனிநபர் சேகரிப்புகளிலும் வைக்கப்பட்டுள்ளதாக யுனெஸ்கோ மதிப்பிட்டுள்ளது.

(v) மீட்பு முயற்சிகளின் அதிகரிப்பு:

- 1950 முதல் 2014 வரையிலான காலகட்டத்தில் வெறும் 13 கலைப்பொருட்கள் மட்டுமே மீட்டெடுக்கப்பட்டிருந்த

நிலையில், கடந்த பத்தாண்டுகளில் மத்திய அரசு வெற்றிகரமாக 650-க்கும் மேற்பட்ட கலைப்பொருட்களை மீட்டெடுத்துள்ளது. அமெரிக்கா (550-க்கும் மேற்பட்ட பொருட்கள்), ஆஸ்திரேலியா, பிரிட்டன், கனடா, சிங்கப்பூர் மற்றும் நெதர்லாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்து இக்கலைப்பொருட்கள் மீட்டெடுக்கப்பட்டுத் திருப்பியளிக்கப்பட்டுள்ளன.

- குறிப்பாக மீட்கப்பட்ட சோழ மற்றும் இந்தியப் பொக்கிஷங்கள்:

- 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நடராஜர் சிலையும், 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அர்த்தநாரீஸ்வரர் சிலையும் 2014-ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவிலிருந்து மீட்கப்பட்டன.
- "கிளி ஏந்திய மங்கை" (Parrot Lady) எனும் மணற்கல் சிற்பம் 2015-ஆம் ஆண்டில் கனடாவிலிருந்து மீட்கப்பட்டது.
- மகிஷாசுரமர்த்தினி சிலை ஒன்று 2015-ஆம் ஆண்டில் ஜெர்மனியிலிருந்து மீட்கப்பட்டது.
- கனடாவிலிருந்து மீட்கப்பட்ட அன்னபூரணி சிலை; அமெரிக்காவிலிருந்து மீட்கப்பட்ட சோழர் காலத்தைச் சேர்ந்த பார்வதி மற்றும் ஸ்ரீதேவி ஆகியோரின் வெண்கலச் சிலைகள், புத்தர் சிலைகள் மற்றும் பல்வேறு செப்பேடுகள் ஆகியவை மீட்கப்பட்ட பிற பொருட்களில் அடங்கும்